# MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE UNIT OF M/S.K.GNANASEKARAN ROUGH STONE AND EARTH QUARRY AT S.F.No. 29/2, 29/3, 30/4, 30/9, 30/12 & 30/13, THOLLAMUR VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT ON 04.07.2023 AT M/S. DHANALAKSHMI MAHAL, KARASANUR VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT.

**Present:**

1. **Tmt.M.Parameswari** : District Revenue Officer, Viluppuram District
2. **Thiru.Er.M.Selvakumar** : District Environmental Engineer Tamil Nadu Pollution Control Board Viluppuram

## The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.

District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram has welcomed the District Revenue Officer, Government officials, Environmentalists and the Public present in the public hearing conducted on behalf of Tamilnadu Pollution Control Board and also informed that the proposed project of Rough Stone & Gravel Quarry owned by Thiru. K.Gnanasekaranto an extent of of 2.33.5 Ha at SF Nos.29/2,29/3,30/4,30/9,30/12&30/13 of Thollamur Village, VanurTaluk, Villupuram District falls under the B1 Category and Schedule 1A of Environment Impact Assessment (EIA) Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change,therefore it is necessary to conduct public hearing to obtain Environmental Clearance for the quarry projects from the State Environment Impact Assessment Authority (SEIAA).

The public hearing meeting for M/s. K. Gnanasekaran Rough Stone and Earth Quarry located at S.F.No. 29/2, 29/3, 30/4, 30/9, 30/12 & 30/13,Thollamur Village, VanurTaluk, Villupuram Districtis being conducted based on EIA Notification dated: 14.09.2006 published by Ministry of Environment and Forest Climate Change New Delhi.

Press release for this public hearing meeting was published in Daily Thanthi and The New Indian Express newspapers dated on 03.06.2023with the approval of the District Collector, Villupuram for conducting of public hearing meeting on 04.07.2023 at 11.00 PM.

In this regard, District Environmental Engineer, requested to express their views one by one in a peaceful manner and also in writing.

Further District Environmental Engineer has requestedthe project consultant to present the project details.

**Technical Presentation, ECO Tech, Chennai**

Project Consultant, ECO Lab, Chennai, has presented the details of the project of M/s. Gnanasekaran Rough Stone and Earth Quarry through power point presentation.

**District Environmental Engineer,TNPCB,Viluppuram.**

He has requested the public to inform their name and village before speaking to express their suggestions, concerns and queries about this project and also assured that their views will be recorded and forwarded to the State Environment Impact Assessment Authority.

**1.Mr. Elumalai, Thollamur Village**

He informed that,

Firstly, by establishing this quarry , this would be hindrance for school going students. He asked that officials has to inspect the road from main road to Thollamur village. There is a possibility of accidentsoccur due to dust arising fromthe quarry and crushers.

He also stated that, due to over load in the trucks bearing stone boulders/Jellyfrom the quarry and stone crushers, accidents being happening from the spillage of boulders/jelly on the road. Hence they have requested to stop over loading of gravel,stone boulders in the trucks. He stated that he has no objection to establish a quarry in the area and also stated that quarry owners should be fulfilling the basic requirement their demands.

While travelling in the two wheelers, it is not visible to see the other vehicle coming in front due to heavy dust pollution. The officials shall examine it and after asking the opinions from the public and permission shall be given to establish the quarry after fulfilling their demands.

**District Environmental Engineer,TNPCB,Viluppuram.**

It is informed that their demands will be registered.

**2. Mr.Parthipan, 4th Ward Member, Thollamur**

He informed that,

One person had been deceased one year before due to truck accident while driving in two wheeler. This was happened that the truck driver was drunken and carrying excess gravel. In this regard, people fromthollamur villagers had staged a road blockade on the main road. The District Collector, Villupuram has came& assured to solve the problem and also assured to fulfill our important demands. They have not fulfilled those demands till date.

Around 100 to 150 students are studying in our village are walking to the school since there is no transportation facilities in our village. Most students get affected due to the stone crushers / tar plant located nearby the road. Those tar plants/crushers were located less than 100 meters from the road ,thereby causing health issue to the students and residents of our village

I am a physical education teacher. So far I have spent 7 lakh rupees for my medical expenses due to kidney problem. Butour villagers are daily wage labourers. Hon'ble Minister has opened a Sub-Health Centre in our village and same was closed within a month.

There are many quarries are Thollamur village.He added that in the display it has been stated that said they will plant 240 trees a year. But how many trees have been planted from the permitted quarries. The TNPCB has instructed to control the dust pollution by sprinkling the water. But they have not sprinkled water even for a distance up to 100 meters. It will affect future generations. In this regard, they have protested and lodged complaint to the Tahsildar. No action has been taken even

after one year.If this meeting could have been conducted in Thollamur village, it is difficult to breath due to heavy dust pollution.

There are more than 1200 people residing in Thollamur village , out of which only 30 people came to this meeting. The livelihood of our villagers are insecure. He informed that he has no objection for permitting . The concern authorities have to monitor whether they are functioning their unit as per the Government norms. More number of quarries were being operating , he stated that as per the norms only two trucks should be allowed in a quarry. Protective equipment should be provided to those working inside the quarry. A ramp collapsed at a quarry today, but no one is aware of this incident so it could not be assessed the damage of this incident. The same shall be informed. The authorities have to monitor whether quarry being operated as per the condition stipulated and requested the officials to inspect. At present most of the quarries were mining more than the approved quantity. Herequested the authorities to investigate and take action against the violators, since mining more minerals causing heavy loss to the government and need to prevent casualties. School students and girls were affected due to this quarrying activity.

**3.Mr. Kumaran, Thollamur Village**

He informed that,

The quarry owners have blocked the stream flow leading to the lake and overflow of the lake by dumping the soil and the same has to be rectified.

**4.Mr. Elumalaiyan, Thollamur Village.**

He informed that,

Permissions are being granted to various stone quarries, in which some of them are violating the Government norms. They are not blasting by using the compressor instead they blast by digging 100 feet and 200 feet from bore wells thereby causing damage to the residents located nearbylike the vibration causing during earthquake. Even though by protesting this activity the quarry owners does the same thing again.While carrying the gravel from the quarry , the spillage of the gravels block the streams/odai in which water is not incoming into the lake.

The quarry/stone crushers owners does not cover their truck with tarpaulin while carrying gravel, powder, stone jelly thereby causing dust pollution. The students couldnot see the upcoming vehicles due to heavy dust.Quarry owner has not fixed the time to blast the quarry, mostly they blast during the school opening and closing time without any intimation thereby causing possible of causualities. Moreover, the quarry owners abide the rules while obtaining the permission, but no one is following the rules as mentioned in the permission.The quarry owners were mining more than the permitted quantity.. All these units should operate without affecting the Environment.

He requested to blast during the specified time as mentioned in the permission. They are dumping the soil at various places. There are many quarries in their village in which the lorry is carrying the gravel and soil from quarry /crusher along with mud on the road which dries and turned into a powder thereby causes dust pollution so the people could not drive their vehicle on the road due to powder dust and frequent accident happens. No officials were taking in this regard.

**5.Tmt. Charulatha, ThollamurVillage**

She stated that,

Many people will get employment by giving permission to this quarry,As of now a few quarries are closed, they will get employment through the upcoming quarry.

Similarly, students of Thollamoor and Parangani villages are dependent on Karasanur School. The school buildings are in a very bad condition and basic facilities like light, fan are not proper in the school. The school is running in very poor conditions. She stated that the requirements of the school should be met through this quarry. Many quarries are operating here. She said that the dust on the road can be controlled by sprinkling the water on rotation basis and approval may be issued to quarry after ensuring above said points and said that no objection for this upcoming this quarry in our village.

**Mr. S. Senthilarasan, Social Activist, Thollamur Village**

He informed that,

This meeting is being held to get environmental clearance. He has no objection to grant permission to the Gnanasekaranquarry but the quarry owner fulfill our demands.

Many quarry owners were present in this meeting. No benefits have been availed to this village from those quarry owners. Here quarries were operating for long years ago and none of them have paid the business tax. Mostly they blast during the school opening and closing time without any intimation to the public. There is a limit to carry the gravel in the truck per day, but they are not following and carryingoverload thereby causing accidents. This has been placed before many forum but so far the request has not been fulfilled. The white shirt would become black while travelling along the road due to dust pollution.As per the norms of the Government the quarries should be located 1 Km away from the village, whereas many quarries, crusher and tar plant are located within half a kilometre radius from our village. Many peoples have died from kidney failure due to operation of the tar plant, But no one talks about this, but I'm not afraid to say about this because I am representing here on behalf of my villagers. Many people have died from kidney failure due to explosives used for blasting in the quarries. No one has taken any action on this. None of the quarry owners have benefited the public. While giving permission to the quarries, I request to provide basic facilities to our village. As displayed in the screen there is no basic facility provided in our village.. He requested them to provide the basic facilities required for their village.

Also, insects like snakes and scorpions bite while going at night time. He requested the project proponent to provide street lights in Thollomur village. Most of the quarries have gone for deep mining and requested to provide basic facilities to our village

**District Environmental Engineer,TNPCB, Viluppuram**.

Thanked all the public and NGOs who have participated in the public hearing meeting.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 8 & 97 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Villuppuram.

District Revenue Officer,
Villupuram.

**விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளமூர் கிராமம், புல எண். 29/2, 29/3, 30/4, 30/9, 30/12 & 30/13, தி/ள். க. ஞானசேகரன் உடைக்கல் மற்றும் எர்த் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 04.07.2023 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள். தனலட்சுமி மஹால், கரசானூர் கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. M. பரமேஸ்வரி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>விழுப்புரம் |
| 2. | Er. மு. செல்வகுமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளமூர் கிராமம், புல எண். 29/2, 29/3, 30/4, 30/9, 30/12 & 30/13 ல் 2.33 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட தி/ள். க. ஞானசேகரன் உடைக்கல் மற்றும் எர்த் குவாரி நிறுவனமானது குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். க. ஞானசேகரன் உடைக்கல் மற்றும் எர்த் குவாரி பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். தனலட்சுமி மஹாலில் 04.07.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் என்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 03.06.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் குவாரியின் நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன்

பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ தெரிவிக்கலாம் என கேட்டுக்கொண்டார்.

**தொழில்நுட்ப விளக்க வல்லுநர், ECO Tech, சென்னை**

திட்ட ஆலோசகர், தி/ள். க. ஞானசேகரன் உடைக்கல் மற்றும் எர்த் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்**

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்தார்.

**1. திரு. ஏழுமலை, தொள்ளமூர் கிராமம்**

இவர் கூறுகையில்,

முதலாவதாக, இந்த குவாரி அமைவதினால் கிராம பள்ளி மாணவர்கள் செல்வதற்கு தடையாக இருக்கிறது. எந்தவொரு அதிகாரி வந்தாலும், ஒரு கிலோ மீட்டர் தூரம் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் இருந்து தொள்ளமூர் கிராமம் வரை வந்து பார்வையிடுங்கள். புகை மண்டலமாக இருப்பதால் விபத்துகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது.

இரண்டாவதாக கிரஷரில் தொழிற்சாலையில் இருந்து லாரியில் அதிகப்படியான ஜல்லி ஏற்றி செல்கிறார்கள். இதன் மூலமாக ஜல்லி லாரியிலிருந்து சரிந்து ரோட்டில் விழுவிதால், அதன் பின்னால் வரும் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் தவறி விழுந்து விபத்து ஏற்படுகிறது. அதனால் அதிகமாக ஜல்லிகளை லாரியில் ஏற்றி செல்வதை தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நாங்கள் குவாரி அமைவதற்கு எந்தவித ஆட்சியேபனையும் தெரிவிக்கவில்லை. நாங்கள் வைக்கும் கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்ற கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார். நாங்கள் இரு சக்கர வாகனங்களில் செல்லும்போது எதிலே வரும் வாகனங்கள் கண்ணிற்கு தெரிவதில்லை. அதனை அதிகாரிகள் ஆய்வு செய்து, பொதுமக்களிடம் கருத்துகள் கேட்ட பிறகு அனுமதி அளியுங்கள் என்றும், எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

பதில் உரை

தங்களது கோரிக்கைகள் பதிவு செய்யப்படும் என்று தெரிவித்தார்.

2. திரு. பார்த்திபன், நான்காவது வார்டு உறுப்பினர், தொள்ளமூர் கிராமம்

இவர் கூறுகையில்,

எங்களது கோரிக்கை என்னவென்றால், ஒரு வருடத்திற்கு முன்பு வெளியூர் சென்று திரும்பிய ஒருவர் இரு சக்கர வாகனத்தின் மீது லாரி ஏறி இறந்தார். அதற்கு காரணம் லாரி ஓட்டுனர் மது அருந்திவிட்டு, அதிகபடியான சரக்குகளை ஏற்றி வந்ததே காரணம். அதனால் நாங்கள் தொள்ளமூர் கிராம மக்கள் சார்பாக மெயின் ரோட்டில் சாலை மறியல் செய்தோம். மாவட்ட ஆட்சியர் அவர்கள் வந்து, எங்களது முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக கேட்டறிந்தார். அந்த கோரிக்கைகளை எங்களுக்கு இதுநாள் வரைக்கும் நிறைவேற்றவில்லை.

எங்கள் ஊரில் உள்ள பள்ளியில் 100 முதல் 150 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்த பள்ளிக்கு மாணவர்கள் நடந்துதான் செல்கிறார்கள். போதிய பேருந்து வசதியும் இல்லை. சாலைக்கு அருகில் கிரஷர் மற்றும் தார் பிளாண்ட் இயங்கி வருவதால், அந்த வழியாக பள்ளிக்கு வரும் மாணவர்கள் எல்லாம் மூக்கை பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த தார் பிளாண்ட் சாலையில் இருந்து 100 மீட்டருக்கும் குறைவான தூரத்தில் இருக்கிறது. இதனால் எங்கள் ஊரில் உள்ளர்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்படுகிறது. நான் ஒரு உடற்கல்வி ஆசிரியர். எனக்கு சிறுநீரக பிரச்சனை இருக்கிறது. எனது மருத்துவ செலவிற்காக இதுவரை 7 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளேன். ஆனால் எங்கள் கிராமத்தில் இருப்பவர்கள் அன்றாட கூலி வேலை செய்பவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து, ஒரு துணை சுகாதார நிலையம் திறந்து வைத்தார்கள். அதனை ஒரு மாதத்திலேயே மூடிவிட்டார்கள் என்று தெரிவித்தார்.

தொள்ளமூரில் அளவுக்கு மீறிய கல்குவாரிகள் இருக்கிறது. இப்போது நீங்கள் திரையில் காட்டியது போல், ஒரு வருடத்திற்கு 240 மரங்களை நடவோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை அனுமதி கொடுத்த கல்குவாரிகள் மூலமாக எத்தனை மரங்கள் நட்டுள்ளார்கள்? மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தலின்படி தினமும் தண்ணீர் தெளித்து மாசை கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னீர்கள். ஆனால் அப்படி செய்யவில்லை. 100 மீட்டர் தூரத்திற்கு கூட தண்ணீர் தெளிப்பதில்லை. இதனால் வருங்கால தலைமுறையினர் பாதிப்படைவார்கள். இதற்கு நாங்கள் போராட்டம் நடத்தி, தாசில்தாரிடம் மனு கொடுத்தோம். ஒரு வருடம் ஆகியும் எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. நீங்கள் இந்த கூட்டத்தை தொள்ளமூரில் நடத்தி பாருங்கள். நீங்கள் வரும் வழியில் உங்களால் மூச்சுக்கூட விட முடியாத அளவுக்கு மாசு உள்ளது.

தொள்ளமூரில் குறைந்தபட்சம் வாக்கு எண்ணிக்கை உடையவர்கள் 1200க்கும் மேற்பட்டோர் உள்ளார்கள். இந்த கூட்டத்திற்கு தொள்ளமூரில் இருந்து 30 பேர் தான் வந்திருக்கிறோம். எங்கள் கிராம மக்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. நீங்கள் இந்த குவாரிக்கு அனுமதி கொடுங்கள், நாங்கள் இந்த குவாரிக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை. நீங்கள் கொடுத்த அனுமதியுடன் தான் செயல்படுகிறார்களா? என்பதை கண்காணிக்க வேண்டும். அதிகபடியான கல்குவாரிகள் இங்கு செயல்படுகிறது. இதில் ஒரு நேரத்தில் இரண்டு லாரிகளை மட்டுமே நீங்கள் அனுமதிக்க வேண்டும். உள்ளே வேலை செய்பவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும். இன்று ஒரு கல்குவாரியில் ரேம்ப் சரிந்து விழுந்துள்ளது. ஆனால் அதுபற்றி இன்னும் யாருக்கும் தெரியவில்லை. அதனால் யார் பாதிப்பு அடைந்தார்கள் என்று கூட தெரியவில்லை. இதனை தெரியபடுத்துங்கள். அதிகபடியான முறைகேடுகள் நடக்கிறது. நீங்கள் அளித்த அனுமதி அளவில்தான் வேலை நடக்கிறதா? என்று அதிகாரிகள் அங்கு வந்து ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். தற்போது செயல்படும் குவாரிகளில் நீங்கள் கொடுத்த அனுமதியை விட அதிகமாக கல் உடைத்து எடுக்கிறார்கள். இதனை அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவர்கள் அதிகமாக கனிமங்களை எடுப்பதனால் அரசுக்கு இழப்பும் ஏற்படுகிறது. எனவே நீங்கள் ஆய்வு செய்து உயிரிழப்புகளை தடுக்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கும் பெண்களுக்கும் நிறைய பாதிப்புகள் ஏற்படுகிறது. எனவே தயவு செய்து ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து மக்களிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**<u>3. திரு. குமரன், சமூக ஆர்வலர், தொள்ளமூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில்,

குவாரி அமைப்பதற்கு முன், தயவு செய்து எங்கள் ஊரில் இருக்கும் ஏரியில் தண்ணீர் செல்லும் ஓடையை மணல் கொட்டி குவாரி உரிமையாளர்கள் மூடி விடுகிறார்கள். எனவே ஏரியில் இருந்து தண்ணீர் செல்ல வழி செய்யுங்கள் என்றுக் கேட்டுக்கொண்டார்.

**<u>4. திரு. ஏழுமலையான், தொள்ளமூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில்,

எங்கள் ஊரில் கல்குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கிறீர்கள். அதில் ஒரு சில விதிமீறல் செயல்பாடுகள் நடக்கிறது. வெடி வைக்கிறார்கள் என்றால் கம்ப்ரஸரில் மட்டும் வைத்து வெடி வைக்கவில்லை. போர் வண்டியின் மூலமாக அடியில் 100 அடி மற்றும் 200 அடி ஆழத்தில் தோண்டி கம்ப்ரஸரில் வெடி வைக்கிறார்கள். அது எங்கள் ஊரில் பக்கத்தில் உள்ள வீடுகளுக்கு எல்லாம் சேதம் அடைகிறது. இது நிலநடுக்கம் போல் அதிர்வு ஏற்படுகிறது. நாங்கள் அதற்கு போராட்டம் செய்தும், மீண்டும் அதையே தான் செய்கிறார்கள். குவாரியிலிருந்து மண் எடுக்கிறார்கள். அந்த மலையிலிருந்து எடுத்து செல்லும்

மண்களை நீர்நிலை மற்றும் ஓடைகளில் கொட்டி மூடிவிடுகிறார்கள். இதனால் ஏரியிலிருந்து தண்ணீர் வருவதில்லை. பவுடர், மண், ஜல்லி எடுத்து செல்லும் போது, அதன் மேல் தார்பாய் கூட போட்டு எடுத்து செல்வதில்லை. பள்ளி மாணவர்கள் போகும் போதும் மற்றும் வாகனங்களில் செல்லும் போதும் எதிரே வருபவை கண்ணிற்கு தெரியவில்லை. அது போல் வெடி வைக்கும் நேரம் இதுதான் என்று வைப்பதில்லை. திடீரென்று அவர்கள் வெடி வைக்கிறார்கள். பள்ளி மாணவர்கள் செல்லும்போது நிறைய முறை இது போல் நடந்துள்ளது. இதனால் உயிருக்கு பாதிப்பு ஏற்படுவதாக தெரிவித்தார்.

மேலும், எல்லோரும் அனுமதி வாங்கும் போது மட்டுமே விதிகளை பின்பற்றுகிறார்கள். ஆனால், அதில் உள்ள விதிகளை யாரும் கடைபிடிக்கவில்லை. குறிப்பிட்ட அளவைவிட, ஒரு நாளைக்கு இவர்கள் அதிகமாக கல்லை வெட்டி எடுக்கிறார்கள். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத அளவுக்கு தொழிற்சாலையை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வெடி வைக்கும் போது, அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே வெடி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மண்ணை பல்வேறு இடங்களில் கொட்டுகிறார்கள். எங்கள் ஊரில் எத்தனையோ குவாரிகள் உள்ளது. அதில் இருந்து மண் ஏற்றி செல்லும் போது சேறும் சகதிமாக ரோட்டில் செல்கிறது. அது காய்ந்து பவுடராக மாறும்போது வண்டியே ஓட்ட முடியவில்லை. அதிகாரிகள் எப்போவாவது தான் வந்து பார்க்கிறார்கள். ஆனால் யாருமே அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. சாலையில் உள்ள பவுடர் கண்ணில் அடிப்பதால் வண்டிகள் ஓட்ட முடியாமல் நிறைய விபத்துகள் நடந்துள்ளது. எனவே அதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

<u>5. திருமதி. சாருலதா, தொள்ளமூர் கிராமம்</u>

இவர் கூறுகையில்,

நீங்கள் இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதன் மூலமாக நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஒரு சில குவாரிகள் தற்போது மூட இருப்பதால், இப்போது வருகிற குவாரியின் மூலமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அதேபோல், கரசானூர் பள்ளியை சார்ந்து தான் தொள்ளமூர், பரங்கனி பள்ளி மாணவர்கள் இருக்கிறார்கள். அங்கு உள்ள பள்ளிக்கூடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. கட்டிடம் சரியாக இல்லை, விளக்கு, மின்விசிறி போன்ற அடிப்படை வசதிகள் கூட சரியாக இல்லை. மிகவும் மோசமான நிலையில் தான் அந்த பள்ளி இயங்குகிறது. இந்த குவாரியின் மூலமாக அந்த பள்ளிக்கான தேவைகளை பூர்த்தி செய்யும்படி தெரிவித்தார். இங்கு நிறைய குவாரிகள் இயங்குகின்றன. சாலையில் உள்ள மாசை, ஒவ்வொரு குவாரியாக சுழற்சி முறையில் வாட்டர் டேங்க் மூலமாக தண்ணீர் தெளித்து அதனை சரி செய்துவிடலாம் என்று தெரிவித்துக்கொண்டார். அதை தாங்கள்

உறுதிபடுத்திக்கொண்டு நீங்கள் இந்த உரிமத்தை கொடுக்கலாம் என்று தெரிவித்தார். இந்த குவாரி வருவதனால் எங்களுக்கு எந்த ஆட்சியேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

6. சு. செந்திலரசன், சமூக ஆர்வலர், தொள்ளமூர்

இவர் கூறுகையில்,

இந்தக் கூட்டம் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக நடைபெறுகிறது. அண்ணன் ஞானசேகரன் கல்குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என்று நான் சொல்லவில்லை. இந்த அனுமதிப்தற்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தி எங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இங்கு நிறைய கல்குவாரி உரிமையாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்கள். அவர்கள் கல்குவாரி அனுமதி வாங்குவதற்காக இங்கு வந்துள்ளார்கள். இந்த கல்குவாரியால் எந்தவொரு நன்மையும் எங்களுக்கு ஏற்படவில்லை. இங்கு கல்குவாரிகள் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதனால் நிறைய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று சொல்கிறார்கள். எங்கள் ஊரில் பள்ளி நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இதுவரை அரசு பள்ளி இந்த ஊரில் உருவாக்க முடியாமல் இருக்கிறது. இதனை கல்குவாரி உரிமையாளர்கள் எல்லாம் மோசமான நிலையில் தான் வைத்துள்ளார்கள். தொழில் வரி நிறைய பேர் இங்கு கட்டவில்லை. கல்குவாரிகளுக்கு வெடி வைக்கிறார்கள். பள்ளிக்கூடம் மாணவர்கள் வரும் நேரத்தில் வெடி வைக்கப்படுகிறது. வெடி வைக்க அனுமதிக்கப்படாத நேரங்களிலும் வெடி வைக்கிறார்கள். ஒரு நாளைக்கு லாரியில் இவ்வளவு தான் அனுமதிக்கப்பட வேண்டும் என்று வரைமுறை இருக்கிறது. ஆனால் இவர்கள் அதனை கடைபிடிக்காமல் அதிகமாக கற்களை ஏற்றி செல்கிறார்கள். இதனால் விபத்துகள் ஏற்படுகிறது. ஆனால் இதுவரை அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அங்குள்ள சாலையில் வெள்ளை சட்டை அணிந்து சென்றால் கரி பூசி கொண்டு வருவது போல இருக்கும். அரசானது, ஒரு கிராமத்தை சுற்றி குறிப்பிட்ட கிலோ மீட்டருக்கு அப்பால் தான் கல்குவாரி அமைய வேண்டுமென்று அரசாணை வெளியிடுகிறது. ஆனால் இந்த நடைமுறையை இவர்கள் பின்பற்றப்படவில்லை. நிறைய கல்குவாரிகள், கிரஷர் மற்றும் தார் பிளாண்ட் எங்கள் ஊரிலிருந்து அரை கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளன. தார் பிளாண்ட் இருப்பதனால், எங்கள் ஊரில் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு நிறைய பேர் இறந்துள்ளார்கள். ஆனால் பயத்தினால் இதனை யாரும் வெளியில் பேசுவதில்லை. இப்போது நான் இதை இங்கு பேசுவதினால் எனக்கு பயமில்லை. எனது கிராம மக்களின் சார்பாக நான் இங்கே பேசுகிறேன். இங்கு உள்ள கல்குவாரிகளில் வெடி மருந்து வைப்பதால் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு நிறைய பேர் இறந்துள்ளார்கள். இதற்கு யாரும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கல்குவாரி உரிமையாளர்களும்

பொதுமக்களுக்கு எந்தவொரு நன்மையும் செய்யவில்லை. எல்லோரும் சுயநலமாக இருக்கிறார்கள். கல்குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கும்போது, எங்கள் கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரையில் நீங்கள் காட்டியவாறு எந்தவொரு அடைப்படை வசதியும் இல்லை. நான் இந்த திட்டத்திற்கு அனுமதி கொடுக்க கூடாது என்பதற்காக நான் வரவில்லை. எங்கள் கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை இவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மேலும், இரவு நேரங்களில் செல்லும் போது பாம்பு, தேள் போன்ற பூச்சிகள் கடிக்கிறது. இதுவரை இந்த பகுதியில் இருட்டில் தான் நாங்கள் கடந்து செல்கிறோம். எனவே குவாரி உரிமையாளர்கள் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மின் விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அத்திப்பட்டி கிராமம் போல் தொள்ளமூர் கிராமம் அழிந்து கொண்டிருக்கிறது. இங்கு உள்ள கல் குவாரிகள் நிறைய ஆழம் தோண்டி கொண்டு போகிறார்கள். வரும் தலைமுறையினருக்கு இந்த கிராமம் இருக்குமா? என்று கூட தெரியவில்லை. அந்த அளவிற்கு ஆழமாக தோண்டுகிறார்கள். இந்தியாவிலேயே எங்கள் கிராமத்தில் தான் அதிகளவு ஆழம் எடுத்துள்ளார்கள் போல இருக்கிறது. எங்களுடைய வேண்டுகோளாக, எங்களது கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்</u>

தி/ள். க. ஞானசேகரன் உடைக்கல் மற்றும் எர்த் குவாரி நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் நன்றியை கூறி, கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்தார்.

**<u>இணைப்பு:</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 8 மற்றும் நபர்கள் 97)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
விழுப்புரம்.